



திருப்பத்தூரில் – கழக வடக்கு மண்டல வாக்குச்சாவடிக் குழு பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்ள ரயில் மூலம் ஜோலார் பேட்டை செல்வதற்கு, நேற்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஏராளமான பொதுமக்கள் மற்றும் பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### கருவறை முதல் கல்லறை வரை நலவாரியத் திட்டங்களின் மூலம்

# மீனவர்களுக்கு நேசக்கரம் நீட்டும் ‘திராவிட மாடல்’ அரசு!

## திருவள்ளூர் மாவட்ட மீனவர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை முகாமில் – மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தகவல்!

திருவள்ளூர், பிப். 15–

மீனவர் நலவாரியத்தின் மூலம் கருவறை முதல் கல்லறைவரை பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவே திராவிட மாடல் நல்லாட்சிக்கு சாட்சி என கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதன்படி தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. அதன்படி திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் நடைபெற்ற நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நிகழ்ச்சியில், சென்னை மண்டல மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் கணேஷ், பொன்னரசு ஆகியோர் வரவேற்புரையாற்றினர். திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர். எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் முன்னிலை வகித்தார்.

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின், புதிதாக உறுப்பினர் ஆனவர்களுக்கு அடையாள அட்டையை வழங்கி சிறப்புரை ஆற்றினார். அப்போது ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், ”நலவாரியத்தின் மூலம் பல்வேறுவகையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கருவில் குழந்தை இருக்கும் போதே நலவாரியத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் 6 மாதங்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. நலவாரிய உறுப்பினரின் குழந்தைகள் பத்தாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், கல்லூரி பயிலும் நலவாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு போட்டித் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெறும் 5 சதவீத குழந்தைகளுக்கான முழுக் கல்விக் கட்டணத்தையும் நலவாரியமே ஏற்றுவருகிறது.

இதேபோல் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், இளங்கலை, முதுகலை படிப்புகள், சட்டம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் என எந்தப் பாடப் பிரிவை பயின்றாலும், ஒவ்வொரு ஆண்டிற்கும் கல்லூரி கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணத்திற்கு நலவாரியமும் உதவித் தொகை வழங்குகிறது. நலவாரிய உறுப்பினரின் மகன் அல்லது மகளின் திருமணத்திற்கும் நலவாரியம் மூலம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதேபோல், 18 வயது முதல் 65 வயதுக்குட்பட்ட நலவாரிய உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் 25 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. நலவாரிய உறுப்பினர் மரணம் அடைந்தால் ஈமச்சடங்கு செலவீனமாக 2500 ரூபாய் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

மொத்தத்தில், கருவறை முதல் கல்லறை வரை மீனவர்களின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் நேசக்கரம் நீட்டுவதில் மீனவர் நலவாரியத்தின் பங்கு உள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட மீனவர் நலவாரியம், அ.தி.மு.க. ஆட்சியில் முடங்கிக் கிடந்தது. அதற்கு புத்துயிர் கொடுத்தது கழகத் தலைவர், முதல்வர் அவர்கள்தான். மீனவர்களுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தந்திருக்கும் முதல்வருக்கு, வரும் தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்களித்து நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.



திருவள்ளூர் மாவட்ட மீனவர் நல வாரிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் பழவேற்காட்டில் நடைபெற்றது.

**திருவள்ளூரில் பணிகள்**

மீனவர் நலவாரியத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த நலவாரிய உறுப்பினர்களுக்கு ஏராளமான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை 27,427 கடல் சார் மீனவர்கள், 2259 உள்நாட்டு மீனவர்கள் என 29,868 மீனவர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கழக ஆட்சியில், மீனவர் நலவாரியத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் 1 கோடியே 66 லட்சத்து 89,250 ரூபாய் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி முதல், இளநிலை பயில்வதுவரை 104 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் திருமண உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 31 மீனவ பயனாளிகளுக்கு தலா 3000 ரூபாய் வீதம் 93 ஆயிரம் ரூபாயும், மீனவ மகளிர் பயனாளிகளுக்கு தலா 5000 வீதம் 1,70,000 ரூபாய் திருமண உதவித்தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. கழக ஆட்சி அமைந்த நாள் முதல் இது வரை திருவள்ளூர் மாவட்டத்தில் விபத்து மரணத்தில் உயிரிழந்த 44 மீனவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் வீதம், 88 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**மீனவ கிராமங்களில் வளர்ச்சித் திட்டங்கள்**

இதேபோல் திருவள்ளூர் மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களும் கழக ஆட்சியில் வந்துள்ளது. கூனங்குப்பம் மீனவ கிராமத்தில் 6 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சுண்ணாம்புக்குளம், சாட்டாங்குப்பம் மீனவக் கிராமங்களில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அரங்கம்குப்பம் மீனவக் கிராமத்தில் 6 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டுள்ளது.

பழவேற்காடு மீனவ கிராமத்தில் 26 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழவேற்காடு முகத்துவாரம் நிரந்தர நிலைத்தன்மையை மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.வைரவன் குப்பம் மீனவ கிராமத்தில் மீனவர்களுக்கான வலை பின்னும் கூடம் கட்ட 81 லட்ச ரூபாயும், அவுரிவாக்கம் மீனவ கிராமத்தில் வலை பின்னும் கூடம் கட்ட 81 லட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்க உள்ளது.

இதேபோல் வல்லம்பேடு மீனவ கிராமத்தில் மீன்பிடி இறங்குதளம் கட்ட 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்க உள்ளது. செஞ்சியம்மன் நகர் மீனவக் கிராமத்தில் காலநிலையை எதிர்கொள்ளும் வகையில் கடற்கரையோர வசதிகளை அமைக்கும்பணி ஒரு கோடியே, 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பசியாவரம் மீனவக் கிராமத்தில் இதே திட்டத்திற்காக 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதேபோல் பழவேற்காடு மீனவக் கிராமத்தில் மீன்பிடி இறங்குதளம் மேம்படுத்தும் பணி 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அதே பழவேற்காடு மீனவக் கிராமத்தில் 26 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழவேற்காடு முகத்துவாரம் நிரந்தர நிலைத்தன்மையை மேம்படுத்தும்பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்படி திருவள்ளூர் மாவட்ட மீனவர்கள் நலனிற்காக ஏராளமான திட்டங்களை நம் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் தந்துள்ளார்கள்.

மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்தியது தொடங்கி, மீனவர் நலன் நாடும் பல திட்டங்களையும் தந்த கழகத் தலைவரின் பொற்கால ஆட்சி மீண்டும் அமைய நம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்வில் பொன்னேரி எம்.எல்.ஏ துரை சந்திரசேகர், கழக முன்னோடிகள், மீன்வளத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மகிழ்ச்சிப் பெருக்கில் மகளிர்! இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பல்ல;

# மகளிரின் மனங்களை குளிர்விக்கும் முதல்வரின் அதிரடி அறிவிப்பு!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

*சென்னை,பிப்.15-*

*ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகளின் வங்கிக் கணக்கில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக 5 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது. இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பல்ல; மகளிரின் மனங்களை குளிர்விக்கும் முதல்வரின் அதிரடி அறிவிப்பு என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு தெரிவித்துள்ளது.*

*அது வருமாறு:-*



தலையங்கம்
தினத்தந்தி
14.2.2026 (சனிக்கிழமை)
மகிழ்ச்சி பெருக்கில் மகளிர்



*தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கு நேற்று காலை “குட் மார்னிங்” என்பது உண்மையிலேயே “சூப்பர் மார்னிங்” ஆக அமைந்தது. அவர்களது செல்போன்களில் ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில், “உங்கள் வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டுள்ளது” என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை கண்ட பெண்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அதே நேரத்தில், “இந்தத் தொகையை நமது கணக்கில் யார் செலுத்தியுள்ளனர்?” என்ற கேள்வியும் எழுந்தது. வங்கிகள் கூட திறக்கப்படாத அந்த நேரத்தில், இவ்வளவு பெரிய தொகையை யார் செலுத்தியிருக்கலாம் என்ற ஆச்சரியமும் அவர்களுக்குள் நிலவியது. இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில்,*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் ஒரு வீடியோவை வெளியிட்டார்.*

*அதில் அவர் வெளியிட்ட அறிவிப்பு, மகளிருக்கு இரட்டிப்பு உற்சாகத்தை அளித்தது. கடும் நிதி நெருக்கடியை சமாளித்து, மத்திய அரசின் ஒதுக்கீட்டுக் குறைப்புகளையும் மீறி கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலில் ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு பயனளித்த இந்தத் திட்டம், விரிவுபடுத்தப்பட்டு தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன் பெற்று வருகின்றனர். நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தலை காரணம் காட்டி, அடுத்த மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படும் மகளிர் உரிமைத்தொகையை நிறுத்துவதற்காக சிலர் கோர்ட்டில் வழக்கு தொடர முயற்சி செய்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*


*எனவே, ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளதாக அறிவித்தார். அதன்படி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத்தொகையாக ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைக் காலச் செலவுகளை கருத்தில் கொண்டு சிறப்பு உதவியாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.5 ஆயிரம் நிதி, ஒரு கோடியே 31 லட்சம் பெண்களின் வங்கி கணக்கில் காலையிலேயே வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதியையும் அளித்தார். மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், தற்போது வழங்கப்படும் ரூ.1,000 உரிமைத்தொகை ரூ.2’ ஆயிரமாக ஆக உயர்த்தப்படும் என்று உறுதியளித்தார்.*

*ரூ.5 ஆயிரம் உரிமைத் தொகை, மகளிர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதால், இது அரசுக்கு கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்தும் என்று சிலர் கூறலாம். ஆனால் தற்போது வழங்கப்பட்டுள்ள ரூ.5 ஆயிரம் தொகையில் ரூ.3 ஆயிரம் என்பது அரசு மாதம்தோறும் செலவழித்து வரும், ஏற்கனவே பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகைதான். மீதமுள்ள ரூ.2 ஆயிரம் மட்டுமே கூடுதல் செலவாகும். இதற்காக தமிழக அரசுக்கு கூடுதல் செலவு ரூ.2,620 கோடி ஆகும். இது மிகப் பெரிய தொகை அல்ல. வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அரசின் வருவாய் நிலையை கருத்தில் கொண்டால், இது தாங்கக் கூடிய செலவு தான். மேலும், அரசின் மொத்த பட்ஜெட்டில் இது ஒரு சதவீதம் கூட இல்லை. வெறும் 0.75 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பு என்ற விமர்சனங்கள் இருந்தாலும், மகளிரின் மனங்களை குளிர்விக்கும் அறிவிப்பு என்பதில் சந்தேகமே இல்லை.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குறிச்சி இரா. நாகராசன்
### பிப்ரவரி 15 (2005)



**கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாயராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த.வேணுகோபால்
### பிப்ரவரி 15 (2024)



**தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.**

**திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக முப்பதாண்டு காலம் பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**ஊராட்சி மன்ற தலைவராக – ஒன்றிய பெருந்தலைவராக – இரண்டு முறை தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக – நான்கு முறை திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக – 2009ஆம் ஆண்டு திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக என 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2019ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பெரியார் விருது” வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**